பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 01 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய விளையாட்டு விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

2. எட்டாவது ஊதியக் குழு அமைப்பது தொடர்பான மத்திய அரசின் முடிவு, ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், நுகர்வையும் அதிகரிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. இந்தியா வந்துள்ள சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முக ரத்தினம், பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்துப் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

4. சத்தீஸ்கரில் பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் நக்ஸலைட்டுகள் 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

5. தில்லி சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Riya Bhatia – Vaidehi Chaudhri** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய விளையாட்டு விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

செஸ் வீரர் குகேஷ், துப்பாக்சி சுடும் வீராங்கனை மனுபாக்கர், இந்திய ஹாக்கி அணி கேப்டன் ஹர்மன்ப்ரீத் சிங் உள்ளிட்டோருக்கு மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருது வழங்கப்பட உள்ளது.

தடகள வீராங்கனைகள் ஜோதி யரார்ஜி, அன்னுராணி, செஸ் வீராங்கனை வந்திகா அகர்வால் உள்ளிட்ட 32 பேருக்கு அர்ஜுனா விருதை குடியரசுத்தலைவர் வழங்க உள்ளார்.

**Sucha Singh, Muralikant Petkar** ஆகியோருக்கு வாழ்நாள் சாதனைக்கான அர்ஜுனா விருது வழங்கப்பட உள்ளது.

பாரா துப்பாக்கிச்சூடு பயிற்சியாளர் சுபாஷ் ராணா, ஹாக்கி பயிற்சியாளர் சந்தீப் சங்வான் உள்ளிட்டோருக்கு சிறந்த பயிற்சியாளருக்கான துரோணாச்சார்யா விருதுகளை திருமதி திரௌபதி முர்மு வழங்க உள்ளார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் லட்சத்தீவுகளுக்கு மூன்று நாள் பயணமாக இன்று செல்கிறார்.

பல்வேறு அரசுத் திட்டங்களையும் அவர், அங்கு தொடங்கி வைக்க உள்ளார்.

தமது பயணத்தின்போது சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகளுடனும் அவர் கலந்துரையாடவுள்ளார்.

<<<>>>

எட்டாவது ஊதியக் குழு அமைப்பது தொடர்பான மத்திய அரசின் முடிவு, ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், நுகர்வையும் அதிகரிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளதில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைப்பதில் அரசு ஊழியர்களின் பங்கு முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், ஸ்ரீஹரிகோட்டாவில் மூன்றாவது ஏவுதளம் அமைக்கப்பட்டுள்ளது நமது விண்வெளித்துறையை வலுப்படுத்தும் என்று கூறியுள்ளார்.

இது விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளிக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<>>>

வளர்ச்சியுடன் பாரம்பரியத்திற்கு அரசு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் வாட்நகரில் நவீன தொல்லியல் அருங்காட்சியகத்தை திறந்து வைத்து, நிகழ்ச்சியில் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சொந்த ஊரில் அமைக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறினார்.

வாட்நகர் 2 ஆயிரத்து 500 ஆண்டுகால கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்று அவர் குறிப்பிட்டார்.

300 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகம், குஜராத் மற்றும் ஒட்டுமொத்த நாட்டின் கலாச்சாரத்தை உலகிற்கு எடுத்துரைக்கும் என்று திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இங்கிலாந்து பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ஜான் ஹீலியுடன் தொலைபேசியில் ஆலோசனை மேற்கொண்டார்.

பாதுகாப்புத் தொழில்நுட்ப ஒத்துழைப்பில் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் அவர்கள் விவாதித்தனர். அண்மையில் கையெழுத்தான இது தொடர்பான ஒப்பந்தத்தின் முன்னேற்றம் குறித்து இரு அமைச்சர்களும் திருப்தி தெரிவித்தனர்.

பாதுகாப்பு தொடர்பான பல்வேறு அம்சங்களில் கூட்டு செயல்பாடுகள் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு குறித்தும் இரு அமைச்சர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

<<<<>>>>

2036ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் பதக்கப் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் இந்தியா வருவதை உறுதி செய்ய தொழில் நிறுவனங்கள் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்கு தொழில் நிறுவனங்களின் ஆதரவு குறித்த கலந்தாய்வுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய அவர், 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த இந்தியா ஆர்வமுடன் உள்ளது என்று அவர் கூறினார்.

ஒவ்வொரு பெரு நிறுவனமும் வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்கான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

உள்ளூர் அளவில் விளையாட்டுகளையும், வீரர்களையும் ஊக்கப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மருத்துவர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

உடல் நலனில் காற்று மாசு ஏற்படுத்தும் பாதிப்புகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்த நூல் வெளியீட்டு விழாவில் பேசிய அவர், அதனைத் தடுப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு அவசியம் என்றும் தெரிவித்தார்.

இதனை ஏற்படுத்துவதில் மருத்துவர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதாகவும், நுரையீரல், இதய நோய்கள் மற்றும் புற்றுநோய் குறித்து மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இந்த நூல் வெளியிடப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

வேட்பு மனுத் தாக்கல் 10-ம் தேதி தொடங்கிய நிலையில் இதுவரை மொத்தம் 841 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மனுக்கள் நாளை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மனுக்களைத் திரும்பப் பெற திங்கள்கிழமை கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 5-ம் தேதியும், வாக்கு எண்ணிக்கை 8-ம் தேதியும் நடைபெற உள்ளன.

<<<<>>>>

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முகரத்னத்துடன் பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், செமிகண்டக்டர்கள், டிஜிட்டல்மயமாக்கல், திறன் மேம்பாடு, போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்டதாக கூறியுள்ளார்.

தொழில், உள்கட்டமைப்பு, கலாச்சாரம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் சிங்கப்பூர் அதிபருடன் விவாதித்ததாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முகரத்னம் குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவையும் சந்தித்துப் பேசினார்.

வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கரும் சிங்கப்பூர் அதிபருடன் இருதரப்பு உறவுகள் குறித்துப் பேச்சு நடத்தினார்.

திரு தர்மன் சண்முகரத்தினம் இன்றும் நாளையும் ஒடிசா மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

<<<<>>>>

சத்தீஸ்கரில் பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் நக்ஸலைட்டுகள் 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிஜப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் நேற்று மேற்கொண்டா தேடுதல் நடவடிக்கையின்போது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

இரவு வரை நீடித்த சண்டையில் 12 பேர் உயிரிழந்ததாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்று வருவதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவின் ஒரு பகுதியாக கலாச்சார மகா கும்பமேளா என்ற தலைப்பில் பிரமாண்ட கலை நிகழ்ச்சிகளை உத்தரப்பிரதேச துணை முதலமைச்சர் திரு. கேசவ் பிரசாத் மௌரியா தொடங்கி வைத்தார்.

பிரபல பாடகர் சங்கர் மகாதேவனின் இசை நிகழ்ச்சியுடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின.

அடுத்த மாதம் 24ஆம் தேதி வரை தினமும் மாலை 4 மணி முதல் 9 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும், இதற்கான அனுமதி இலவசம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மின்னணு பொருட்கள் ஏற்றுமதி கடந்த மாதத்தில் 35 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் 3 புள்ளி ஐந்து எட்டு பில்லியன் டாலர் அளவுக்கு மின்னணு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இது 2 புள்ளி ஆறு ஐந்து பில்லியன் டாலராக இருந்தது எனவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், உத்தரபிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் பல பகுதிகளில் இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் அடர்த்தியான மூடுபனி நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், மேற்குவங்கம், ஒடிசா, மத்தியப்பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த சில நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

நாட்டின் வடமேற்கு பகுதிகளிலும் குஜராத்திலும் குறைந்தபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறையக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Riya Bhatia – Vaidehi Chaudhri** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 4-6, 6-3, 10-5 என்ற செட்கணக்கில் மெக்சிகோவின் **Maria Rose –** ரஷ்யாவின் **Yashina** இணையை வென்றது.

------------

உலக கோப்பை கோகோ போட்டியில் இந்திய ஆடவர் அணி பூடானையும், மகளிர் அணி மலேசியாவையும் வென்றன.

தில்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஆடவர் அணி 71-34 என்ற புள்ளிக் கணக்கில் பூடானை வீழ்த்தியது.

மகளிர் அணி 100-20 என்ற புள்ளிக் கணக்கில் மலேசியாவை வென்றது.

இன்று நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் பஞ்சாப் - மும்பை அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

-------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் கலிங்கா அணி, 5-1 என்ற கோல் கணக்கில் தில்லி அணியை வென்றது.

**<<<<The end>>>>**